கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 36/2024

பிரதிவாதி தரப்பு சாட்சி – 2 **ராதிகா** என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 06.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாணை</u>

1. எனக்கு இந்த வழக்கு பற்றிய விவரம் எப்போது தெரியும் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்திலிருந்தே தெரியும். எனது கணவர் பெயர் ரமேஷ். எனது கணவர் கடந்த 10.07.2023 ம் தேதியில் பிரிக்கப்படாத சொத்தின் 4 ல் 2 பங்கு பாகத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் என்ன புல எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.448/3B2B2 ஆகும். வா.சா.ஆ.1 ஆவணம் தான் எனது கணவர் 10.07.2023 ம் தேதி கிரைய ஆவணத்தின் சான்று நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நான்கெல்லை விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது கணவர் பிரிக்கப்படாத சொத்தில் 4 ல் 2 பங்கு பாகத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.448/3B2B2 உள்ளதா என்றால் இல்லை. புல எண்..448/3B2B என்று தான் உள்ளது என்றால் சரிதான். 12.07.2023 ம் தேதி எனது கணவருக்கு பாத்தியபட்ட 4 ல் 1 பங்கு சொத்தையும், வா.சா.ஆ.1 ன் படி எனது கணவர் கிரையம் பெற்ற 4 ல் 2 பங்கு சொத்தையும் சேர்த்து எனது கணவர் 1 ம் பிரதிவாதி குமரேசனுக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் தான் எனது கணவர் குமரேசனுக்கு செய்து கிரைய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது கணவர் 4 ல் 3 பங்கு பாகம் என்று பொதுவாக குறிப்பிட்டு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.2 ஆவணத்தின் சொத்து விவரத்தில் புல எண்.448/3B2B என்று மட்டுமே உள்ளது என்றால் சரிதான். எனது கணவருடன் பிறந்த சகோதரர் பெயர் குமரேசன் என்றால் சரிதான். மேற்படி குமரேசனுக்கு 4 ல் 1 பங்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி குமரேசனுக்கும், எனது கணவருக்கும் ஏதேனும் பாகம் பிரித்து பத்திரம் எழுதப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி குமரேசன் தனக்கு பாத்தியப்பட்ட 4 ல் 1 பங்கு பாகத்தை வாதிக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணம் தான் மேற்படி குமரேசன் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.9 கிரைய பத்திரத்திலும் சர்வே எண்.448/3B2B என்று மட்டுமே உள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி வா.சா.ஆ.9 ல் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தின் நான்கெல்லையில் உள்ளது போல் 15½ சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி குமரேசன் வாதிக்கு கிரையம் செய்யும் போதும் பாகம் பிரிவினை செய்யப்படாத சொத்தை தான் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நாளது தேதிவரை வாதியும், நானும் பாகம் பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணம் நான் 2 ம் பிரதிவாதி ரவினாவிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்று நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் வீடோ அல்லது செட்டோ காண்பித்து ஆவணம் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. 2 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ரவினா யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் என்னிடம் கிரையம் வாங்கிய குமரேசன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட சமயத்திலும் பாகம் பிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு பின்னர் தான் நான் கடந்த 11.03.2023 ம் தேதி கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி தற்போது தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள செட் யார் போட்டது என்றால் குமரேசன் என்பவர் போட்டுள்ளார். மேற்படி செட் போட்டு கட்டிடம் கட்ட வேலை ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. அந்த சமயத்தில் தான் பாகம் பிரிவினை செய்யப்படாத சொத்தில் கட்டிடம் கட்ட கூடாது என்று வாதி கேட்டதின் பெயரில் பிரச்சனை ஏற்பட்டு அதன் விளைவாக வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் பிரச்சனை இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பேசி முடிக்கப்பட்டது. மேற்படி பேச்சுவார்த்தை எப்போது நடைபெற்றது என்றால் சரியாக நினைவில்லை. பாகம் பிரிக்காமல் இன்னார் சொத்து என்று அடையாளம் காணாமல் கட்டிடம் கட்டுவது தவறு என்றால் சரிதான். ஆனால், செட் போட்டு முடிக்கும் வரை வாதி ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை. தாவா சொத்தை முழுவதுமாக அடையும் நோக்கத்தில் தொடர்ச்சியாக மேற்படி கிரைய ஆவணங்கள் ஏற்படுத்தி வாதியின் உரிமையை பறிக்கம் நோக்கத்தில் செயல்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

7. வருவாய் துறையினரை பயன்படுத்தி தாவா சொத்துக்களை நானும், எனது கணவரும் பாகம் பிரிக்காமல் உட்பிரிவுகள் செய்துவிட்டோம் என்றும், அவ்வாறு செய்தது வாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் நேரடியாக பாகம் பிரிக்காமல் மேற்படி தொடர்ச்சியாக கிரைய பத்திரங்கள் ஏற்படுத்தி வாதியின் உரிமையை பறிக்கும் நோக்கத்தில் செயல்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு முழுமையான காரண கர்த்தா நானும் எனது கணவரும் தான் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**2 முதல் 6 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya

**Additional District Munsif,**

**Kulithalai.**